நல்லூர் கிளை நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை ரூபா! 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | தை 12 | (25-01-1994) | செவ்வாய்க்கிழமை | ஓசை 341

## கொழும்பில் வீசும் காற்றில் புற்றுநோய் காவிகள்

கொழும்பு உட்பட பிரதான நகரங்களில் வீசும் காற்றில் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய காவிகள் உள்ளன. இதன் அளவு மெக்ஸிக்கோ நகரத்தின் அளவுடையதாயுள்ளது. இலங்கை விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையமும் இயற்கைவள எரிசக்தி விஞ்ஞான அதிகார சபையும் மத்திய சுற்றாடல் அதிகார சபையும் இணைந்து நடத்திய ஆய்விலேயே இதுபற்றிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாவித்து அகற்றப்பட்ட வாகனங்களும், முறையாகப் பாவிக்கப்படாத பழைய வாகனங்களில் இருந்து வரும் புகைமூட்டமுமே இப்படி சூழல் அசுத்த மடைவதற்குக் காரணமாகும். கைத்தொழிற் சாலைகளிலிருந்து வெளிவரும் (4ஆம் பக்கம் பார்க்க)

# காமினி திசநாயக்காவிற்கு பாதுகாப்பு அமைச்சர் பதவி?

## ஐ. தே. கவில் காத்திருக்கிறது

[கொழும்பு]

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டதும் அவருக்கு நிதியமைச்சர் பதவி அல்லது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர்பதவி வழங்கப்படவுள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல வாரப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ராஜினாமாச் செய்வதன் மூலம் காமினி உட்பட ஜனநாயக ஐக்கிய முன்னணிப்பிரமுகர்களுக்குபாராளுமன்றஉறுப்பினர்பதவிகள்வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; தென்பகுதிஅரசியல்கட்சி உறுப்பினர்களின் திடீர்க் கட்சித் தாவல்களினால் கொழும்பு அரசியலில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தலைவர் காமினி திசநாயகாவிற்கு நிதி அமைச்சர் பதவி காத்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் சில அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் ராஜினாமாச் செய்வதன் மூலம் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பிரமுகர்கள் சிலருக்கு பாராளுமன்றத்தில் இடமளிக்கப்படுமென நம்பப்படுகின்றது.

காமினி திசநாயகாவிற்கு நிதி அமைச்சர் பதவி அல்லது தேசிய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பதவி நிச்சயம் கிடைக்குமென அரச உயர் மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

காமினி திசநாயகாவிற்கு அமைச்சர் பதவி வழங்குவதன் மூலம் இரு மாகாண சபைகளையும் கைப்பற்றும் திட்டம் ஒன்றை ஐக்கிய தேசிய கட்சி வகுத்துள்ளது.

## யுத்தத்தில் வெற்றி பெறும் சிந்தனை அரசிற்கு இல்லை

–அனில் முனசிங்க

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் நித்திரையிலும் யுத்தத்தில் வெற்றி காண திட்டமிடுகிறார். ஆனால் அரசாங்கத்திடமோ அந்த சிந்தனையே கிடையாது.

இவ்வாறு களுத்துறைமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அனில் முனசிங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது, வெளிநாட்டு கிரிக்கெட் குழுவினரை தோல்வியடையச் செய்ய வேண்டும் என எண்ணும் மக்கள் பிரபாகரனை தோல்வியுறச் செய்ய வேண்டும் என்று கூறுவதில்லை.

இக் கூட்டத்தில் மேல் மாகாண முதலமைச்சர் திருமதி (4 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தினால் பெறப்படும் சமாதானமே நிலையானது

### பேரினவாத பத்திரிகையின் கூச்சல்

(கொழும்பு)

''யுத்தத்தின் இறுதித் தீர்வாக மட்டுமே சமாதானம் இருக்க வேண்டும். யுத்தத்தினால் சமாதானத்தைப் பெறமுற்பட்டால் மட்டுமே நிலையான சமாதானமாக அது இருக்கும். யுத்தத்திற்கு நாட்டின் மற்றைய எல்லாவற்றையும்விட முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.'' இவ்வாறு 'திவயின' பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும்; ''யுத்தம் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது அதனைச் சீர்செய்ய படையினருக்கு நவீன பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். இதன் மூலம் அவர்களைப் பலப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

''புதிய செயல் திட்டங்கள் மற்றும் புதிய தந்திரோபாயங்கள் மூலம் யுத்தத்தை இவ்வருடமே முடித்து நாட்டு மக்களுக்கு வெற்றியைத் தேடித்தர புதியதளபதி முயற்சிக்க வேண்டும்.

''யுத்தத்தில் வெற்றி தோல்விகள், பின் வாங்கல்கள் ஒரு சாதாரணவிடயம். எதிரி பலத்துடன் வரும்போது தற்காலிகமாகப் பின் வாங்க வேண்டும். இது தவிர்க்க முடியாதது. இதனை இராணுவத்திற்கு ஏற்பட்ட தோல்வி எனக் கூறி விமர்சிக்கக் கூடாது. இதனால் இராணுவத்தினர் உளரீதியாக பாதிக்கப்படுவர். இவ்வாறான செய்கை எதிரியை மேலும் பலப்படுத்தும்'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிறிமாவோ-பிரேமச்சந்திரா சந்தித்துப் பேசினர்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளரும் வடமேல் மாகாண சபை முதலமைச்சருமான ஜி.எம். பிரேமச்சந்திரா தற்போதைய அரசியல்நிலைவரங்கள் குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சு வார்த்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவருடன் இக் கட்சியைச் சேர்ந்த வேறொரு உறுப்பினரும் சிறிமாவோ பண்டாரநாயக்காவை சந்தித்து பேசியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பிரச்சினை உடன் தீர்க்காவிட்டால் பிரபாகரனிடம் இலங்கை பறிபோகும்

### நெவில் பெர்னாண்டோ

(கொழும்பு)

## மாகாண சபைகளை கைப்பற்ற ஐ.தே.க. முயற்சி

### சந்தேசிய தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத்

## நெவில் பெர்னாண்டோ

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் இதேவேகத்தில் சென்றால் பிரபாகரன் முழு இலங்கையையும் பிடித்துவிடுவார் என களுத்துறை மாவட்ட எம்.பி.யான டாக்டர் நெவில்பெர்னாண்டோ தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்பொதுக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசு தீர்வு காண எடுத்த வழி பிழையானது என நான் விளக்கினேன். அப்பிரச்சினைக்கு தீர்வு காண எடுக்கும் முயற்சிகள் இதே வேகத்தில் இருந்தால் பிரபாகரன் முழு இலங்கையையும் பிடித்து விடுவார்.

நாம் செய்யத் திட்டமிட்டிருந்த ஒரு செயலை இன்றைய ஜனாதிபதி செய்தது பாராட்டுக்குரியதாகும். அது தான் தொண்டமான் சொல்வதற்கெல்லாம் சம்மதம் தெரிவிக்காமல் தொண்டமானைத் தலைகுனியச் செய்ததாகும். இது எம்மால் செய்யப்படவேண்டியதாக இருந்தது. இச்செயலைச் செய்த பெருமை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவையே சாரும் என்றார்.

## சூரியகந்த எலும்புக் கூடு விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

சூரியகந்த பகுதியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பாக விசாரணை பெப்ரவரி முதலாம் திகதி வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

இரகசியப் பொலிசார் நேற்று நீதிமன்றத்தில் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து நீதிமன்றம் மேற்படி விசாரணையை ஒத்திவைத்தது.

இதேவேளை சட்டத்தரணிகள் இப் பகுதி புதைகுழிகள் மீண்டும் தோண்டப்படவேண்டும் என எம்பிலிப்பிட்

( 4ஆம் பக்கம் பார்க்க )

# கிழக்கு மாகாண தேர்தல்களில் வேட்பாளர் யாரென்று பலர் அறியார்

### பி. பி. ஸி. செய்தியாளர் விமர்சனம்

இனப்பிரச்சினையால் தலைகீழாக மாறியிருக்கும் மட்டக்களப்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. கிழக்கில் வாழ்க்கை சகஜநிலைக்குத் திரும்பிவிட்டதாகக்காட்டிக்கொள்ள விரும்புகிறது அரசு. ஐந்து ஆண்டுகளில் முதல் முதலாக நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு இன்னும் சில வாரங்களே இருக்கின்றன. ஆனால் மட்டக்களப்பில் ஒரு சுவரொட்டி கூடக் காணப்படவில்லை என்று பி. பி. ஸி. செய்தியாளர்சியாக்கோ நோர்சு தெரிவிக்கிறார்.

அவர் மேலும்,

தேர்தல்பிரசாரத்தில் வேட்பாளர் எவரும்ஈடுபடவில்லை. தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை இன்னமும் இல்லை என்று கூறும் தமிழ்க்குழுக்கள் தேர்தலைப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளன.

உண்மையை மறைப்பதற்காக சிறிலங்கா படையினர் வேட்பாளர்களை நிறுத்தியிருப்பதாக பிரமுகர்களும், உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்களும் குற்றம் சாட்டியுள்ளனர்.

மட்டக்களப்பில் வேட்பாளர்கள் யார் என்பது பலருக்குத் தெரியாது. தேர்தலில் வாக்களிக்கப்போவதாகப் பலர் கூறினாலும் இந்தத் தேர்தல் சுதந்திரமான, நியாயமான தேர்தலாக இருக்கும் என அவர்கள் நம்பவில்லை.

தேர்தலை வன்முறைஇன்றி நடத்துவது அரசுக்கு முக்கியம். மட்டக்களப்பைச் சுற்றி எடுக்கப்பட்டிருக்கும் கடுமையான பாதுகாப்புநடவடிக்கை வன்முறைகள் இடம்பெறாமல் தடுக்கக் கூடும். ஆனால் புலிப்படையினர் சண்டையைத் தொடங்குவார்கள் என்றும் பலரும் கருதுகிறார்கள் என்று தெரிவிக்கிறார்.

### பாதுகாப்பு வலயம் பற்றி

## சர்வதேச செஞ்சிலுவை அதிகாரிகள்-புலிகள் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனை பாதுகாப்பு வலயத்தின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்தி வரும் தாக்குதல்களால் உருவாகியிருக்கும் நிலைமை குறித்து இன்று யாழ்ப்பாணம் வரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழுவினர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## சந்தேசிய தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் தென்பகுதியின் சகல மாகாணசபைகளிலும் தனது ஆட்சியைக் கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சி உறுதி பூண்டுள்ளது என பி.பி.ஸியின்சிங்கள சேவையாகிய சந்தேசிய தனது செய்தி ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையிலேயே தென்மாகாணசபை கலைக்கப்பட்டது. மேலும் வடமேல்மாகாண முதலமைச்சர் ஜீ. எம் பிரேமச்சந்திராவை தமது பக்கம் ஈர்த்துள்ளதன் மூலம்அம்மாகாணசபையைக் கைப்பற்ற முயல்கிறது. அடுத்த நடவடிக்கையாக மேல் மாகாணசபையில் முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர முயற்சிக்கிறது என அது மேலும் தெரிவித்தது.

### சர்வதேச செஞ்சிலுவைச் சங்க

## தென்னாசியப் பிரதிநிதி இன்று யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தென்னாசியப் பிரதிநிதி உட்பட சில செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

மேற்படி பிரதிநிதியான திரு. பிலிப் கொண்டசா மற்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி திரு. பிலிப் டுபோர் மற்றும் டொமினிக் ஆகியோரே இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

மேலும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலய பாதுகாப்பு அதிகாரியான திரு. பீற்றர் நிக்கலஸ்ஸும் இன்று யாழ். வருகிறார்.

அத்துடன் கொழும்பு அதிமேற்றிராணியார் நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ உட்பட ஆயர் குழுவினரும் இன்று யாழ். வருகின்றனர்.

## ஐ.தே.க. பிரசார மேடையில் மீண்டும் ஒஸி தோன்றுவார்

(கொழும்பு)

தென்மாகாணசபை தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசார மேடைகளில் ஒஸி குணவர்த்தன பிரதான பேச்சாளர்களில் ஒருவராக இடம்பெறவுள்ளார். இவருடன் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் உயர்கல்வி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா ஆகியோரும் பிரதான பேச்சாளர்களாக இடம்பெற உள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மரணமானதன் பின்னர் ஒஸி அபயகுணசேகர ஐக்கிய தேசியக் கட்சி மேடைகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தார். தற்போது தேர்தல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணைவீச்சு குறித்து யாழ். அரச அதிபர் விளக்கம்

யாழ். குடாநாட்டில் சிறிலங்கா இராணுவம் தொடர்ந்து நடத்திவரும் எறிகணைத் தாக்குதல் குறித்து யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிடம் கூறியுள்ளார்.

கடந்த சனியன்று அரச அதிபர் பாதுகாப்புச் செயலாளரைச் சந்தித்துப்பேசினார்.

இச் சந்திப்பின் போது

(4ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க ராணுவ பயிற்சி கல்லூரியில் சிறிலங்கா ராணுவ அதிகாரி திருட்டு

### திருப்பி அனுப்பப்படுமுன் தலைமறைவு

(கொழும்பு)

அமெரிக்க இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியிலிருந்துவெளியேற்றப்பட்ட சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்தலெப்டினன்ட் கேணல் ஒருவர் அங்கு தலைமறைவாகியுள்ளார். இந்த அதிகாரி அங்கு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டதைத் தொடர்ந்தே இவர் இராணுவக் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டார்.

இவ்வாறு 'சண்டேரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

தலைமறைவாகியுள்ள இவரைக் கண்டுபிடித்து சிறிலங்காவிற்கு திருப்பி அனுப்ப

(4ஆம் பக்கம் பார்க்க)

## வாதுவவில் தபால்பொதி இன்று வருகிறது

(யாழ்ப்பாணம்)

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான தபால் பொதிகளுடன் வாதுவ கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டு வெளிநாட்டு தபால்கள் அடங்கிய 768 தபால் பொதிகளுடன் யாழ்ப்பாண குடாநாட்டிற்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களின் ஒரு தொகுதி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக்கொள்ளல் தமிழ் கற்பித்தலின் உன்னதம் ஆசிரியர் பங்கு பேராசிரியர் - கா. சிவத்தம்பி விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (இ-8408)

### ஸ்ரீலங்கா அச்சகம்

ராஜா தியேட்டர் அருகாமையில் அமைந்திருப்பதே மக்கள் அபிமானம் பெற்ற ஸ்ரீலங்கா அச்சகம். உங்கள் பிரசுர வேலைகளுக்கு எமது அச்சக வேலைப் பாவியுங்கள். (7308)

### SPOKEN ENGLISH

Spoken English with Grammar, Literature, மொழித்திறன், பொது அறிவு, உளச்சார்புடன் கற்பிக்கப்படுகிறது. V. N. Kandasamy, 87, திருநெல்வேலி றோட், (றயில் கடவைக்கு சமீபமாக) கொக்குவில். (7299)

### விற்பனையாகிறது

காவேரி சீயாக்காய்ப்பவுடர் இப்போது எங்கும் கிடைக்கும். 50 கிறாம் 1 பைக்கட்டுக்கு 94-ம் ஆண்டு பொக்கட் கலண்டருடன் விற்பனையாகிறது. (7319)

### மூக்குக்கண்ணாடி

உங்கள் கண்களுக்கும், முகங்களுக்கும் ஏற்ற டாக்டர்களின் மருந்துச் சிட்டைக்கமைய மூக்குக்கண்ணாடிகளை தாமதம் எதுவுமில்லாமல் பெற்றுக்கொள்ள நாடுங்கள். முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட சேவையில் இன்றும்-மொறாயஸ் 50, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன்சந்தி யாழ்ப்பாணம். (சி-8274)

### பெயரமைத்தலுக்கான எண் ஜோதிட வெளியீடு

அதிர்ஷ்டமான திகதிகளில் பிறந்தவர்களைவிட பெயர் மாத்திரம் அதிர்ஷ்டகரமாக உடையவர்கள் மேன்மையடைவதைக் காணலாம். பெயரெண்ணை நன்றாக அமைத்துவிட்டால் வாழ்க்கை சீர்பட்டுவிடும், பலன்கள், விளக்கங்களுடன் எங்கும்

# சிசு மரண விகிதாசாரம் யாழ்ப்பாணத்தில்அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குழந்தைகள் தாயின் வயிற்றில் இறந்த பின் பிரசவிப்பதும், பிறந்த சிசுக்கள் மரணம் அடைந்ததும் சென்ற வருடத்தில் அதிகரித்து இருந்ததாக வைத்திய சாலை புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது,

தாயின் வயிற்றிலேயே இறந்த பின் பிறந்த சிசுக்கள் 161 எனவும், பிறந்த சிசுக்களில் 103 மரணமடைந்தன எனவும் தெரிய வருகிறது. அதே வேளை கடந்த வருடத்தில் 6999 பேர் மட்டுமே யாழ் போதனா வைத்திய சாலையில் மகப் பேற்றுக்காக அனுமதிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மூலிகைகளின் உற்பத்திக்கு பிரதேச சபை திட்டம்

(தொல்புரம்)

பாரம்பரிய வைத்தியமுறைகளை ஊக்குவிக்குமுகமாக மானிப்பாய், ஆனைக்கோட்டைப் பகுதிகளில் ஆயுர்வேத மருந்துவகைகளுக்குத்தேவையான மூலிகைகளை உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று வலி தென்மேற்குப் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படுகிறது.

மேற்படி மூலிகை உற்பத்தித் தோட்டம் வலி தென் மேற்குப் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகத்தின் ஆறு பரப்புக்கள் கொண்ட காணியில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மூலிகைத் தோட்டத்திற்கான பாசன வசதிக்கென 20 ஆயிரம் ரூபா செலவில் நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் ஒரு பயன் உள்ள திட்டமாகையால் இவை நடப்பு வருடத்திற்குள் பூர்த்தியாகும் பட்சத்தில் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதென தெரியவருகிறது. (41)

## 42ஆவது ஆண்டு நிறைவு

யாழ் மாவட்டத்தில் இயங்கும் றோட்டரக்ட் கழகம் தனது42ஆவதுஆண்டுநிறைவு விழாவை நடாத்தியுள்ளது. இந்நிகழ்ச்சியின்போது கடந்த வருடம்நடத்தப்பட்ட புகைப் படம் மற்றும் மனையியல் கண்காட்சியில் பங்குபற்றிய கலைஞர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் பார்வையற்ற இரு மாணவர்களுக்கான நிதித்தேவையில் ஒரு பகுதியும் கையளிக்கப்பட்டுள்ளது.

# நிவாரண விநியோகம் மேலும் தாமதமாகும்

(யாழ்ப்பாணம்)

சென்ற டிசம்பர் மாதத்திற்குரிய இறுதி இரண்டு வாரங்களிற்கான இடம் பெயர்ந்தோர் உலர் உணவு நிவாரண விநியோகம்மேலும் ஒரு வாரம் தாமதமாகுமென யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது.

இதற்கான உணவு முத்திரை விநியோகமே தற்சமயம் நடைபெற்று வருகின்றது. இது முடிந்ததும் உலர் உணவு விநியோகம் உடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் உணவு முத்திரைகளை இடம் பெயர்ந்த குடும்பங்கள் அவரவர் தங்கள்பகுதி கிராம சேவையாளரிடம் சென்று பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். (பா)

# மார்கோகப்பலில்மண்ணெய் வருவது தாமதமாகும்

டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்கான 4500 பரல் மண்ணெண்ணெய் இன்னமும் மார்கோ கப்பலில் ஏற்றி முடியவில்லை எனவும் நேற்றுத்தான் அக்கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு மண்ணெண்ணெய்ஏற்றுவதற்காக சென்றதாகவும் யாழ் மாவட்டத் திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை நோக்கி மேற்படி கப்பல் புறப்பட்டு விட்டதாக சிறிலங்கா வானொலி தெரிவித்த செய்தியை அவர் திட்டவட்டமாக மறுத்ததோடு இந்த மண்ணெண்ணெய்க்கான முற்பணம் 28 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (பா)

## ஒய்வூதிய கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடு தீவு நயினாதீவுபலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுவோருக்கான ஜனவரி மாதக்கொடுப்பனவு நேற்று முன் தினம் தொடக்கம் அடைக்கல மாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்கடி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படுகின்றது. (22)


## அறிவித்தல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சாவகச்சேரிப் பிரிவு

அங்கத்துவம் புதுப்பித்தல், புதிய அங்கத்துவம் பெறுதல், நிர்வாகக் குழுத்தேர்தல்

எமது பிரிவின் சகல இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஆயுள் அங்கத்தவர்கள் தவிர்ந்த ஏனையோர் தங்கள் 1994-ம் ஆண்டின் அங்கத்துவத்தை 11-02-94 திகதிக்கு முன் எமது பொருளாளரிடம் பணம் கட்டி புதுப்பிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

புதிய அங்கத்துவம் பெறவிரும்புவோர் விண்ணப்பப்படிவ மூலம் 11-2-94க்கு முன் விண்ணப்பிக்கவும்,

27-03-94-ல் எமது பிரிவுத்தேர்தல் நடைபெற இருப்பதால் குறிப்பிட்ட திகதிகுப் பின் அங்கத்துவம் பெறுவோர் தேர்தலில் வாக்களிக்கவோ போட்டியிடவோ முடியாதென்பதை அறியத்தருகின்றோம்.

தென்மராட்சி கிராமசேவகர் பிரிவுதோறுமுள்ள இ. செ. சி. சங்க அலகுகள் இவ்விடயத்தை முக்கிய கவனத்திற்கெடுத்து விரைவில் செயற்படும்படிவேண்டுகின்றோம்.

V.P. தியாகராசா

விராட் விஸ்வப் பிரம்மனே நம

## சித்திரத்தேர் விற்பனை

திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இருக்கும் தேர் அடித்தளப்பகுதி விற்பனைக்குண்டு. அதனை நேரில் பார்வையிட்டு அதன் விலை மதிப்பீட்டை. தேர்த்திருப்பணிச் செயலாளருக்கு 10-2-94க்கு முன் அறியத்தரவும். கூடிய விலை கோருபவருக்கு தேர் விற்பனை செய்யப்படும்.

ஸ்ரீபத்திரகாளி அம்பாள்
தேர்த்திருப்பணிச் சபை
திருநெல்வேலி கிழக்கு.

(7322)

வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கம்


## வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

காலம்:: 26-01-94 புதன்கிழமை
காலை 9.30 மணி

இடம்:- புதிய காரியாலய பணிமனை,
கொடிகாமம் வீதி, நெல்லியடி.

நடப்பு வருட புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்


## 45-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
1-8-1920

உதிர்வு
12-12-1993

### அமரர் கந்தர் கணபதி

(கோவிற்புலம், தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.)

அன்பான தெய்வமே! ஆலமரம் போல் எமைக்காத்த அப்பாவே!
அன்பாக வழி நடத்திய மாமாவே ஆசையுடன் அரவணைத்த அப்பப்பாவே
நீங்கள் எமை விட்டு பிரிந்து 45 நாட்கள் நகர்ந்தாலும்
உங்கள் அன்பு முகம் மறக்க முடியவில்லை பார்ப்பதற்கு பலதிருக்க
பாதியிலே எமை விட்டு விண்ணுலகம் சென்றாலும் எங்கள்
நெஞ்சங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்திக்கு இறைவனைப்பிரார்த்திக்கிறோம்

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு ஆதரவு தந்தஅனைவர்க்கும் நன்றி தெரிவித்தும் இன்று (25-01-94) நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தற்போதைய முகவரி
மைலனி, சுன்னாகம். (7320)

## நினைவு கூருகின்றோம்...

## 1994-01-25

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்- கைதடி, நாவற்குழி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**வினோத் | ராஜன்** (யோகலிங்கம் செல்வகுமார்- மானாவளை, மட்டுவில் வடக்கு, யாழ்)

கிளிநொச்சி முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 6 தமிழர்கள். ரயில் நிலையத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட குழந்தைகள் பெண்கள் உட்பட 11 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு தொழில் கடமைக்குச் சென்று திரும்புகையில் கிளிநொச்சி, இயக்கச்சி பகுதியில் வைத்து தேசவிரோத குழுவினரால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட,

நாட்டுப்பற்றாளரான,

**குமாரசாமி தர்மலிங்கம்** (கட்டுடை, மானிப்பாய்-யாழ்)

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்காப்படை

யடைவதைக் காணலாம்; பெயரெண்ணை நன்றாக அமைத்துவிட்டால் வாழ்க்கை சீர்பட்டுவிடும், பலன்கள், விளக்கங்களுடன் எங்கும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன; ஸ்ரீ வாணி, உடுப்பிட்டி. (7324)

இ. செ. சி. சங்க அலகுகள் இவ்விடயத்தை முக்கிய கவனத்திற்கெடுத்து விரைவில் செயற்படும்படிவேண்டுகின்றோம்.

**V.P. தியாகராசா**
கௌரவ செயலர்
சாவகச்சேரிப் பிரிவு

(7325)

இடம்:- புதிய காரியாலய பணிமனை,
கொடிகாமம் வீதி, நெல்லியடி.

நடப்பு வருட புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற இருப்பதால் அனைத்து உறுப்பினரும் கூட்டத்துக்கு தவறாது சமுகம் தரவும்.

-செயலாளர்

(7321)

ஓம்

## சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலயம்

# திருமஞ்ச வெள்ளோட்ட விழா

காலம்: ஸ்ரீ முக வருடம் தை மாதம் 13-ம் நாள் (26-01-1994)
புதன்கிழமை மாலை 4-00 மணி.

தலைமை: வேத வித்தகர் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்

## நிகழ்வுகள்

**திருமஞ்ச வெள்ளோட்டம்**
**மங்கள விளக்கேற்றல்**

திருமுறை ஓதல்: செல்விகள்: வத்சலா செல்லத்துரை
சுகந்தினி தங்கராசா.

வரவேற்புரை: திரு. ஆ. ஞானசேகரம் அவர்கள் (ஆலய பரிபாலன சபை)

ஆசியுரை: நல்லை சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
அருள்கவி சி. விநாசித்தம்பிப் புலவர் அவர்கள்- அளவெட்டி
கம்பவாருதி திரு. இ. ஜெயராஜ் அவர்கள்

கலைஞர் கௌரவம்: திருமஞ்சத்தை நிர்மாணித்த ஆசாரியார்
சிற்பகலாமணி திரு. ஆ. ஜீவரத்தினம் அவர்களைக் கௌரவித்தல்

வாழ்த்துப்பா இசைத்தல்: இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் அவர்கள்

வாழ்த்துரைகள்: திரு. கா. சந்திரராசா அவர்கள் - உ. அரசாங்க அதிபர் வலிமேற்கு
கலாநிதி க. கனகராசா அவர்கள் (மில்க்வைற்)
திரு. மூ. சிவானந்தன் M.A. அவர்கள்
திரு. த. கோவிந்தசாமி அவர்கள் - தலைவர் யாழ் மாவட்ட வ. சங்கம்
சொல்லின் செல்வர் பொன். சாம்பசிவம் ஆசிரியர் அவர்கள்
திரு. சி. சபாநாதன் அவர்கள் (இ. வா. சங்கம், வட்டுக்கோட்டை)

நன்றியுரை: திரு. செ. ஸ்ரீ சந்தணராசா அவர்கள் - செயலாளர் ஆலய பரிபாலன சபை

## பட்டி மண்டபம்

## இந்து மதம் பெரிதும் வலியுறுத்துவது

| அன்பையே | அறத்தையே | தியாகத்தையே |
|---|---|---|
| திரு. இரா. செல்வவடிவேல் | திரு. த. சிவகுமாரன் | திரு. ஆறுதிருமுருகன் |
| திரு. ச. மணிமாறன் | திரு. த. சிவசங்கர் | திரு. க. குமாரதாசன் |

நடுவர் திரு. இ. ஜெயராஜ்

தைப்பூசத் திருவிழாவன்று (27-01-94) வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் திருமஞ்சத்தில் சுவாமி வீதி உலா வரும் காட்சி இடம்பெறும்.

- உபயகாரர்கள்

(7317)

# அறிவித்தல்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயத்திற்கு பரிபாலன சபை அமைக்க இருப்பதால் பொன்னாலை, நெல்லியான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 18 வயதுக்கு மேற்பட்ட சைவசமயிகளாக இருப்பவர்கள் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ளலாம். அங்கத்துவக் கட்டணம் வருடச் சந்தா ரூபா 100/- ஆயுள் சந்தா ரூபா 1000/-

விண்ணப்ப முடிவுத் திகதி:- 10-02-94 பி. பகல் 5.00 மணி வரை

தொடர்பு கொள்ளும் இடம்: ஆலய காரியாலயம்

நேரம்:- காலை 9 மணி — மாலை 5 மணி வரை

ஆலய தர்மகர்த்தா
**சி. கயிலைநாதன்**

(7318)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

## செல்வி காயத்திரி இலங்கநாதன்
(உரிமையாளர் நாதன் சலவைதொழிலகம் சுன்னாகம்)

எங்கள் அன்புச் செல்வம் காயாவே! நீ நடப்பாய், எதிர்காலத்தில் நீ நல்ல படியாக வாழவேண்டும் என்று வேண்டாத தெய்வம் இல்லை, செய்யாத வைத்தியம் இல்லை, இத்தனைக்கும் பயன் உன்னை எங்களிடமிருந்து 26-12-93 அன்று காலன்கவர்ந்ததே. உன் ஆத்ம சாந்திக்கு எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டி நிற்கும்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள்:- காண்டீபன், கார்த்திகா,
உற்றார், உறவினர்கள்.

(சி-8449)

நாட்டுப்பற்றாளரான,

**குமாரசாமி தர்மலிங்கம்** (கட்டுடை, மானிப்பாய்-யாழ்)

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கிருஷ்ணகுமார்** (பரமானந்தம் தயானந்தம்-கொழும்புத்துறை - யாழ்)

1992ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதல்ல வீரச்சாவெய்திய,

**கபிலன்| கபில்ராஜ்** (பெரியதம்பி பாக்கியராசா-சளுவாஞ்சிக்குடி-மட்டு)

மட்டக்களப்பில் காவலரண் ஒன்றின் மீதுதாக்குதல் மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**பட்டாபி| அறவிழிநாதன்** (காசிநாதன்சிவனேசரவி - முறக்கொட்டாஞ்சேனை-மட்டு)

மட்டு-இலுப்பையடிச்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவகதினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில வீரச்சாவெய்திய,

**குட்டிராஜ்** (ஞானசேகரம் உதயராஜ் - மயிலம்பாவெளி - மட்டு)

இதேபகுதியில் சிறிலங்கா இராணுத்வதினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**சிவனேசன்| சிவா** (குஞ்சுத்தம்பி சிவகுமார்-துறைநீலாவணை - மட்டு)

**கலைவேந்தன்| ஜான்** (தம்பிப்போடி அரியன்-பன்குடாவெளி - மட்டு)

1993ஆம் ஆண்டு திருமலை - கந்தளாய் பாலத்தடி முகாமிற்கு காவல் உலாச்சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீதான அதிரடித்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சத்தியசாயி | புவிராஜ்** (சத்தியமூர்த்தி பகீரதன் கல்முனை-அம்பாறை)

**2-ம் லெப். வேணுச்செல்வன் கரன்**
(பொன்னையா அரசரத்தினம் - துறைநீலாவணை மட்டு)

**2-ம் லெப். பிரம்பன் | சோழன்**
மாணிக்கபோடி சோமசுந்தரம் - கிரான்குளம்-மட்டு)

வவுனியா - செட்டிகுளம், முதலியார்குளம் பகுதியில் அமைந்துள்ள சிறிலங்கா காவலரண் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் ரவிச்சந்திரன்** (சுப்பிரமணியம் ஆனந்தன் - 1ஆம் கட்டை, ஓமந்தை - வவுனியா)

**லெப். சர்மிளன்** (இராசையா இராசநாயகம்-சேமமடு, ஓமந்தை - வவுனியா)

**2-ம் லெப். குணபாலன் | ராஜன்**
(இராமலிங்கம் ஆனந்தகுமார்-இரணைமடுச்சந்தி-கிளி)

**லெப். பிரதீப்** (துளசிதாஸ் திருக்கேதீஸ்வரன் மடுக்கோயில் - மன்னார்)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-8448)

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

ஆற்றல் மிக்க மாலுமிக்கு காற்றும் அலைகளும் எப்பொழுதும் துணை புரியும் — எட்வர்ட் கிப்பன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05


## யதார்த்தத்தை எவரும் புறக்கணிக்க முடியாது

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவரும், அமைச்சருமான தொண்டமான் அரசியலில் வகிக்கும் பாத்திரமும், அவரது நிலைப்பாடும் முரண்பாடுகள் நிறைந்தவை; விமர்சனத்திற்குரியவை என்பதில் சந்தேகமே இல்லை. இருப்பினும், இனப்பிரச்சினை தொடர்பாக அண்மைக் காலமாக அவர் கூறிவருபவை ஓரளவு யதார்த்த நிலையை அவர் சரியாக கணிப்பீடு செய்துள்ளமையே காட்டுகின்றது.

இதில் இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்புடனேயே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என்பது சரியான கணிப்பீட்டின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானமாகும். இதுவே இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றையும் சமாதானத்தையும் உருவாக்கக்கூடியது என்பதும், யதார்த்தத்தை பிரதிபலிக்கும் முக்கிய முடிவாகும். சிலவேளை, அமைச்சர் தொண்டமான் தனது அரசியல் லாபம் கருதித் தனது நிலைப்பாட்டில் இருந்து மாறுபட்டாலும் இந் நிலையில் மாற்றம் ஏற்படப்போவதில்லை.

கடந்தகால அரசியலில் காலத்திற்குக்காலம் சிங்களக் கட்சிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு உறுதுணையாக நின்ற தமிழ்க்கட்சிகள் தமது நிலைப்பாட்டில் தெளிவில்லாமலே இருந்தன. அத்தோடு, தமக்குள் இருந்த போட்டி காரணமாக முண்டியடித்துக் கொண்டு சிங்களக் கட்சிகளுக்கு உதவ முன்வந்தனரே ஒழிய தமிழர்களின் பிரச்சினைகளை முனைப்புடன் முன்வைக்கவில்லை. அதாவது தமிழரின் பிரச்சினையுடன் கூடிய நிபந்தனைகளுடன் ஒத்துழைப்பை வழங்காமல் ஆட்சி அதிகாரத்தில் பங்கு பற்றும், குறிப்பாக கூறுவதானால் அமைச்சுப் பதவியைப் பெறுவதற்குப் பேரம்பேசும் முயற்சியிலேயே ஈடுபட்டனர்.

இதேவேளை, சிங்களக்கட்சிகளும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதை விடுத்து ஒரு அமைச்சுப் பதவிகள்- அவையும் முக்கியமானவை தவிர்ந்த - மூலம் தமிழ்த் தலைவர்களைத் திருப்திப் படுத்தி வந்தன. அத்தோடு, இனப்பிரச்சினை குறித்த சில சட்டங்களை ஆக்கிய போதும், அவற்றை அமுல் படுத்தாமல் இடப்பில் போட்டும் விட்டனர்,

கிழக்கு உள்ளூராட்சி

## தேர்தல் வேட்பாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்க அரசு மறுப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தற் பாதுகாப்பிற்கு ஆயுதங்களை வழங்க சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு மறுத்துவிட்டதாக் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியா நகரசபை மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடும் அங்கத்தவர்கள் தமது தற்பாதுகாப்பிற்கு துப்பாக்கிகளை தருமாறு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இத் தேர்தலில் 2013 வேட்பாளர்கள் போட்டியிடுவதால் இவ்வளவு தொகையான ஆயுதங்களை வேட்பாளருக்கு வழங்குதல் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையக் கூடும் எனக்கருதுவதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் கடந்த தேர்தல்களில் வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் இன்றுவரை மீளளிக்கப் படவில்லை என்றும் இவ் ஆயுதங்கள் இன்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருந்து வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

## பட்டதாரிகளுக்கு உடன் வேலை ஆராய விசேடகுழு நியமனமாகும்

பட்டம் பெற்று வெளியேறும் பட்டதாரிகளுக்கு அவர்கள் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறும் போதே வேலை வாய்ப்பு பெற்றுக் கொள்வதை இலகுபடுத்துவது தொடர்பாக ஆராய விசேட பல்கலைக்கழக சேவைக்கமிட்டி ஒன்று அமைக்கப்பட வுள்ளது.

உயர் கல்வி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்காவுடன் பல்கலைக்கழக உபவேந்தர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் நடைபெற்ற பேச்சின் போதே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சகல பல்கலைக்கழகங்களிலும் இவ் வேலைவாய்ப்பு விசேட அமைப்பு உருவாக்கப்படவுள்ளது. தாம் பட்டம் பெற்றதும் பட்டத்திற்கு இணையான தொழிலைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், இதுவரை இப்படியான முறை இருக்காமையினால் பெற்ற பட்டத்தைவிட வேறு தொழில்களில் அதாவது கல்விக்கும் தொழிலுக்கும் தொடர்பற்ற தொழில்களை மேற்கொள்ளப்பட்டமையினால் பல பாதிப்புகள் ஏற்பட்டமையும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

## யானைகளின் அட்டகாசம் வன்னியில் அதிகரிப்பு

மன்னார் மாவட்டத்தின் பல கிராமங்களிலும் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து இருப்பதாகத் தெரிய வருகிறது. இரவுநேரங்களில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி வரும் இந்த யானைகள் பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. மன்னார் மாவட்டத்தின் குஞ்சுக்குளம், கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக் குளம், அக்கராயன்குளப் பகுதிகளிலும் யானைகளால் வயல்களும் பெருமளவில் பாதிக்கப் பட்டுள்ளன.

## அணைக்கட்டு வலுவூட்டப்பட்டது

கிளிநொசசிக் கோட்டத்திலுள்ள அக்கராயன் குளக்கட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டு மானப் பகுதியின் கிளி- தேச நிர் மாணிகளினால் வலுவூட்டப் பட்டுள்ளது. கடந்த நான்கு மாதங்களாக கடும்மழைக்கு மத்தியிலும் நடைபெற்ற ரூபா 5, 76, 161 பெறுமதியான இந்த வலுவூட்டல் பணி இடம் பெற்றது.

இவ்வலுவூட்டல்வேலைகளினால் அண்மையில் பெய்த பெருமழையினால் குளம் உடைப் பெடுப்பது தவிர்க்கப் பட்டதுடன் குளத்தில் கூடிய ளவு நீர் தேக்கக் கூடியதாயிருப்பதால் இப்பகுதியில் கடந்த காலத்தை விடக் கூடியளவு பயிர்ச் செய்கையினை மேற் சொள்ளக் கூடியதாயிருக்குமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டு மானப் பகுதியினர்தெரிவிக்கின்றனர்.

## அம்பாந்தோட்டையில் அதிக கவனம் செலுத்துக

### கட்சியினருக்கு டி. பி. கோரிக்கை

(கொழும்பு)

தென்மாகாண சபையின் நடைபெறவுள்ள தேர்தலின் போது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தென் மாகாணத்தின் ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாகாணசபை தேர்தலில் 7 இடங்களை ஐக்கிய தேசிய கட்சி கைப்பற்றியதாகவும், அண்மையில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் 10க்கு மேற்பட்ட ஆசனங்கள் கைப்பற்றப்பட வேண்டும் எனவும் இதற்கு ஆவன செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கட்சியின்முழுப்பலத்தையும்

## போட்டிப் பரீட்சை

## புலிகளின் நடவடிக்கை தமிழகத்தில் அதிகரிப்பு

### காங்கிரஸ் எம். பி. குற்றச்சாட்டு

(சென்னை)

புலிகளின் தாக்குதல் நடைபெறலாம் என அஞ்சி தமிழ் நாடு அரசாங்கம் பாதுகாப்பை பலப்படுத்தி உசார் நிலையில் இருந்த போதிலும் இராமநாதபுரம் கடல்வழியாக இலங்கையின் வடபகுதிக்கு அத்தியாவசியப்பொருள்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் உசார் நிலை எல்லாம் வெறும் பத்திரிகையில் மட்டுமே என்று இந்திரா காங்கிரஸ் எம் பி. வி. ராஜேஸ்வரன் கூறியுள்ளார்.

இராமநாதபுரம் எம். பியான இவர் மேலும் கூறுகையில், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கரையோரப்பகுதிகளில் தமிழ்நாடு அரசாங்கம் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதிலும் புலிகள் இராமநாதபுரம் கரையோரப்பகுதி ஊடாக வடபகுதிக்கு பொருள்களை எடுத்து செல்கின்றனர். அவர்களுக்கு இராமநாதபுரம் கரையோரப்பகுதி பாதுகாப்பான இடமாக இருந்து வருகின்றது.

இந்த 165கிலோ மீற்றர் கரையோரப் பகுதியில் இந்திய கடற்படையினரும், கரையோரக் காவல் பகுதியினரும் இரவு பகலாக காவலில் ஈடுபடமுடியாமல் இருக்கின்றது. தமிழ்நாடு பொலிசார் தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பை பலப்படுத்தினால் புலிகள் வடபகுதிக்கு பொருள்களை எடுத்துச் செல்வதை தடை செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த தி. மு. க ஆட்சிக் காலத்திலும் பார்க்க இப்போது புலிகள் பொருள்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்வது இருமடங்காக அதிகரித்துள்ளது. இது பொலிசாருக்ும் தெரியும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

## கரையோர மாவட்டங்களில் 27இடத்தில்சோதனைசாவடி

### - காவல்துறை துணைப் பணிப்பாளர்

(சென்னை)

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் மற்றும் சிதம்பரனார், கன்னியாகுமரி மாவட்டங்களில் இருபத்தேழு இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாக திருநெல்வேலி அரசு காவல்துறை துணைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் மனுநீதி நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில், இம் மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். நெல்லை மாவட்டத்தில் கோவில் கொள்ளைகளை தடுக்க ஆறு சிறப்பு பிரிவுகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்தியாவுக்கு வெளியார் கற்பிக்கத் தேவையில்லை

### -வெளியுறவு அமைச்சு அதிகாரி

(டில்லி)

மனித உரிமை விவகாரங்களிலும், ஜனநாயகத்திலும் இந்தியா உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறது. இது பற்றி வெளியார் யாரும் இந்தியாவுக்கு கற்பிக்க வேண்டியது அவசியமில்லை. இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பஞ்சாப் பிரச்சினை பற்றி அண்மையில் அமெரிக்க அதிபர் வெளியிட்ட கருத்துகள் தொடர்பாக காட்டமாகப் பேசிய இந்த அதிகாரி மேலும் கூறுகையில், பஞ்சாப் பிரச்சினைக்கு அந்த மாநில மக்கள் ஜனநாயக முறையில் தீர்வு கண்டுவிட்டார்கள். சீக்கியர்கள் உட்பட அனைத்து மதப் பிரிவு மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டதாகவும் தெரிவித்தார். இது விடயத்தில் புதுடில்லி கொண்டுள்ள கவலையை அமெரிக்க

## சிறுவனின்

தோடு, இனப்பிரச்சினை குறித்த சில சட்டங்களை ஆக்கிய போதும், அவற்றை அமுல் படுத்தாமல் இடப்பில் போட்டும் விட்டனர்,

ஆனால் விடுதலைப் புலிகள் பதவிக்காகப் பேரம் பேசும் நிலையில் இல்லை. இனப்பிரச்சினையின் தீர்வு என்பது தமிழ் மக்களின் பாதுகாப்புடனும், சுதந்திரத்துடனும் கூடியது என்ற அடிப்படையில் அமைந்துள்ளது என்பதே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாகவுள்ளது. இந்நிலையினை அமைச்சர் தொண்டமானும் புரிந்து கொண்டுள்ளமை தெரிகின்றது.

இந்நிலையில் அமைச்சர் தொண்டமானின் இந்நிலைப்பாடானது யதார்த்தபூர்வமான அரசியல் அணுகுமுறைக்கு அவசியமானதாகும். யார் விரும்பினால் என்ன? விரும்பாவிட்டால் என்ன? தமிழ் மக்களின் தேசிய இனப் போராட்டத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் முன்னெடுத்துச் செல்கின்றது. அதற்கு தலைமை ஏற்று வழிநடத்திச் செல்பவர் தலைவர் பிரபாகரன். இந்நிலையில், தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வு என்பது விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும், அதன் தலைமையுடனுமே செய்துகொள்ளப்படவேண்டியது அவசியமானதும் தவிர்க்கப்படமுடியாததுமாகும்.

அவ்வாறு இல்லாமல், அதாவது கடந்த காலத்தில் புலிகளைத் தவிர்த்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட்டுத் தோற்றுப்போன சம்பவங்களும் உண்டு. இந்தியா புலிகளை ஒடுக்கி தமது கட்டுப்பாட்டிற்குள் இயங்கும் குழுக்களைக்கொண்டு வடக்கு-கிழக்கு மாகாணசபை ஆட்சியை நடத்த முற்பட்டு தோற்றுப் போனதுண்மை. அத்தோடு, முன்னாள்சிறிலங்கா ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாசா ஆகியோரும், இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டுத் தோற்றுப் போனவர்களே ஆகும்.

இவ்வாறானயதார்த்தத்தைப்புரியாதசெயற்பாடானது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு எதையும் கொண்டுவரப்போவதில்லை. இதேவேளை புலிகளை இராணுவ ரீதியாக ஒடுக்கிவிட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடானது மேலும் மேலும் வன்முறைக்கு இட்டுச்செல்லுமே ஒழிய ஒருபோதும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க உதவப்போவதில்லை. இதனை இன்று சிறிலங்காவை ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி மட்டுமல்ல எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் இன்றைய யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ளவும், எதிர்காலத்தில் இலங்கையில் வன்முறை பெருகவும், இரத்த ஆறு ஓடவும் வேண்டுமா என்பதை இவ்விரு கட்சிகளுமே தீர்மானிக்கும் நிலையில் உள்ளமையினாலாகும்.

டி. பி. விஜேதுங்கா தென் மாகாணத்தின் ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்தசனிக்கிழமை நடைபெற்ற மாகாண கட்சி கூட்டத்தில் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார். 14 ஆசனங்கள் கொண்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சென்ற ஆவன செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கட்சியின்முழுப்பலத்தையும் இங்கு பிரயோகிக்கப்படலாம் என்றும் எனவே எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் இம்மாவட்டத்தில் வன்முறைகள் நடைபெறலாம் எனவும் பொதுஜன ஐக்கிய முன்னணி அச்சம் கொண்டுள்ளது.

## ஒப்பந்தத்தை எதிர்க்க இதனையே செய்யமுடிந்தது

### ராஜீவை தாக்கிய சிப்பாய் தெரிவிப்பு

(கொழும்பு)

''இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்க்கத் தன்னால் அது மட்டுமே செய்ய முடிந்தது'' என இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் இடம்பெற்ற இராணுவ மரியாதையின்போது முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியைத் தாக்கிய கடற்படைச் சிப்பாய் தெரிவித்தார்.

தென் மாகாணசபைத்தேர்தலில் சிங்களமா சம்மேளனத்தின் பூமி புத்திர இயக்க சார்பில் இவர் தேர்தலில்போட்டியிடுவது தெரிந்ததே. இவரிடம்ராஜீவ் காந்தியைத் தாக்கியது குறித்து கேட்ட போதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

## சுய தொழிலை ஊக்குவிக்க ஆடு வளர்ப்பு அறிமுகம்

கிளிநொச்சிக் கோட்டத்தில் உள்ள ஆனைவிழுந்தான் கிராமத்திலே அண்மையிலே ஆடு வளர்ப்புத் திட்டமொன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் முதற்கட்டமாக 12 பயனாளிகளுக்கு05 ஆடுகள் வீதம் 60 ஆடுகளும இனப்பெருக்கத்திற்கான5 கடாக்களையும் வழங்கியுள்ளது.

அத்தோடு அவற்றினைப் பராமரிக்கும் ஆலோசனைகளும், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளும் திட்டக் கண்காணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சில மாதங்களுக்கு முன்னர் இந்தக் இராமத்திலே கோழி வளர்ப்புத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு பெரும் வெற்றியளித்துள்ளமையும் இங்கு பண்ணை முறையில் கோழி வளர்ப்பதில் எதுவித முன் அனுபவமும் இல்லாத இம்மக்களுக்கு கோழி வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

---

### விபத்து

இருசக்கர உழவு இயந்திரம் ஒன்றும், மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்ட விபத்து மானிப்பாய் வீதி கோணாந்தோட்ட வீதி சந்தியில் அண்மையில் இடம் பெற்றது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதி காயம் அடைந்ததுடன் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது.

## போட்டிப் பரீட்சை

கல்விக்கல்லூரி (பஸ்துன்றட்ட) ஆங்கில பயிற்சி நெறிக்கு அனுமதிக்கான 'பரீட்சை 1994-01-29ஆந் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்றும் கல்விக்கல்லூரி (பொது) கணித,விஞ்ஞான ஆரம்ப நெறிகளுக்கான அனுமதிப் பரீட்சை 1994-01-30ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்றும் இப்பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளை 1994-01-27ஆம் திகதிவரை கிடைக்கப் பெறாதவர்கள் யாழ் கல்வித்திணைக்களத்துடன் தொடர்புகொள்ளும் வண்ணம் யாழ் வலயம் 1கல்விப்பணிப்பாளர் அறிவிக்கிறார்.

### ஒய்வூதியக் கொடுப்பனவு

யாழ் மாவட்டத்தில் இருக்கும் விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் 1994 ஜனவரி மாதத்திற்கான ஒய்வூதியக் கொடுப்பனவு நாளை புதன் கிழமையன்று கமத்தொழில் காப்புறுதிச் சபையின் மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது.

## அன்பளிப்பு வழங்கப்பட்டது

(வடமராட்சி)

பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமத்தில் நடைபெற்ற தூய அன்னை சாரதா தேவியின் 141ஆவது ஜென்ம தினத்தை யொட்டி ஆச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கற்கோவளம் மெதடிஸ்த அ.த.க பாடசாலையில் கல்வி பயிலும் சிறுவர்களுக்கு அன்னை நினைவாக கொப்பிகள், பென்சில்களை அன்பளிப்பு செய்து வைத்தார். (யே)

## சிறுவனின் சாதனை

(சென்னை)

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்கா நல்லூர் என்ற கிராமத்தில் நான்கு வயதுடைய சிவனேசன் என்ற சிறுவன் உலகவரைபடத்திலுள்ள 180 நாடுகளை சரியாக இனங்காட்டுவதுடன் அவற்றின் தலைநகரங்களையும் சரியாக தெரிவிக்கின்றான். அத்துடன் அந்தந்த நாடுகளில் புழக்கத்திலுள்ள நாணயங்களின் பெயர்களையும் சரியாக கூறுகின்றான் இது தவிர ஐந்நூறு பொது அறிவுக் கேள்விகளுக்கு சரியாகப் பதில் சொல்லி இச்சிறுவன் மக்களை வியப்பில் ஆழ்த்தி வருகிறான்.

கள் தீர்க்கப்பட்டு விட்டதாகவும் தெரிவித்தார். இது விடயத்தில் புதுடில்லி கொண்டுள்ள கவலையை அமெரிக்க அதிகாரிகளிடம் தெரியப்படுத்துமாறு வாஷிங்டனிலுள்ள இந்தியத் தூதுவருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

கிளின்டன் நிர்வாகம், காஷ்மீர் பற்றியும், மனித உரிமை விவகாரங்கள் பற்றியும், பஞ்சாப் பற்றியும் வெளியிடும் இத்தகைய கருத்துக்களும், அறிக்கைகளும் இரு தரப்பு உறவுகளில் பிரதிகூலமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாஷிங்டன் வெளியிட்டு வரும் தொடர்ச்சியான எதிர் மறையான கருத்துக்களையடுத்தே அதிபர் பில்கிளிண்டன், செனட்டர் ஹரி கொண்டிட்டிற்கு எழுதியிருக்கும் கடிதமும் முக்கியத்துவம் பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## குவைத்துக்கு நட்டஈடு; ஈராக் எண்ணெய்

(ஜெனீவா)

யுத்த அழிவுகளுக்கு நட்டஈடு வழங்குவது குறித்து நடவடிக்கை எடுப்பதற்காக ஐக்கிய நாடுகளின் நட்டஈடு வழங்கும் குழு ஆறு பிரிவாக வகுக்கப்பட்டுள்ளது.

இவ் ஆறு பிரிவுகளில் நான்கு குவைத் மீது ஈராக் படையெடுத்தபோது அங்கு தொழில் புரிந்த வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து ஆராயும் எனத்தெரிவிக்கப்படுகிறது. ஏனைய இரண்டு பிரிவுகளும் அரசாங்க, தனியார் நிறுவனங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து ஆராயும்.

இதனடிப்படையில் இவ் ஆறு குழுக்களும் ஜெனீவாவில் கூடி நட்டஈடு வழங்கத் தேவையான 3.2 பில்லியன் டாலர் பணத்தையும் பெற்றுக் கொள்ளும் வழி குறித்து ஆராய்ந்தன. இப்பணத்தைப் பெற்றுக் கொள்ள ஈராக்கினால் விற்பனை செய்யப்படும் மசகு எண்ணெயில் இருந்து ஒரு பகுதியை பெற்றுக் கொள்வதற்கு இக்குழு தீர்மானித்துள்ளது.

தானியங்கள் நாம் வளர்த்து
தரணி எல்லாம் பசி தீர்ப்போம்

## சுகாதார ஊழியருக்கு இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகராட்சி மன்ற எல்லைக்குள் இருக்கும் சகல சுகாதார ஊழியர்களுக்கும் பாடசாலை சுகாதாரசேவையில் ஈடுபட்டிருக்கும் சுகாதாரத் திணைக்கள ஊழியருக்குமான கருத்தரங்கொன்று இன்று காலை 9.00 மணிக்கு நாவலர் மண்டபத்தில் மாநகரசபை சுகாதாரப் பகுதியினரால் நடாத்தப்பட உள்ளது.

யாழ் மாநகராட்சிமன்ற பிரதேசத்திலுள்ள பாடசாலைப் பிள்ளைகள் ஊட்டச் சத்துகுறைபாட்டுநோய்நிலைகளுக்கும், கண்பார்வை, உளரீதியான குறைபாடுகள், சொறி, சிரங்கு, பூச்சி, புழுநோய் மற்றும் இரத்தச் சோகை போன்ற நோய்களுக்கும் இலக்காகி உள்ளனர் இதனால் மாணவர்களின் கல்வித் திறமை வெளிப்பாடு பாதிப்படைகின்றது. நாங்கள் மாணவர் சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் வழியில் சில நடவடிக்கைகளை இவ் வருடத்தில் நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம் அதன் முன்னோடியாகவே இக் கருத்தரங்கை இன்று நடத்த உள்ளோம் என யாழ் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரியின் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக் கருத்தரங்கிற்கு சம்பந்தப்பட்ட பகுதி கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்களும் அழைக்கப்பட்டுள்ளார்கள் எனவும், ஒன்றிணைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் நோக்குடனேயே இது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதெனஅதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆங்கில ஆசிரியர் பயிற்சிநெறி

ஆங்கில ஆசிரியர் பயிற்சிநெறிக்கு நீர்கொழும்பிற்கும் வவுனியாவிற்கும் தெரிவு செய்யப்பட்டவர்களிற்கான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை மாலை 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெறும்.

இக் கலந்துரையாடலில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட வேண்டியிருப்பதால் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வேலணை ப.நோ.கூ. சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களிற்கான தை மாதத்திற்கான ஓய்வூதியக் கொடுப்பனவு தற்பொழுது பணமாக வழங்கப்படுகிறது. (88)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**24-01-1994**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 398

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-4170, 42-5417, 41-9167, 42-0970, 27-1542, 40-1516, 26-0502, 26-8810, 27-4628, 41-6784, 41-7865, 24-5912, 26-7307, 28-4545, 28-1062, 27-6415, 28-3439, 24-4457, 26-7068, 27-2089, 26-6775.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-9489, 26-9626, 27-9721, 26-1609, 41-4129, 24-5967, 24-0336, 26-0560, 28-3735, 24-5529, 26-3068, 26-7039, 27-6493, 26-6075, 24-5416, 26-9495, 42-1754, 41-8031, 41-9396, 28-6640, 41-5015.

மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ. து)

இரண்டு சில்லு உழவு இயந்திரம்

(லாண்ட் மாஸ்ரர்)

## கருத்துரை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக புவியியற் கழகம்நடத்தும் ''இந்து சமுத்திர விருத்தியும், இலங்கையின் தோற்றமும்'' என்னும் கருத்திலான கருத்துரை நாளை மாலை 3மணிக்கு நடைபெறவுள்ளது.

புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எஸ். ரி. பி. இராஜேஸ்வரன் அவர்களால் நடாத்தப்படவுள்ள இவ்வுரை புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக புவியியற் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## நிவாரண உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)

வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளிற்குட்பட்டோருக்கான புதிய நிவாரண உணவு முத்திரைகள் தற்போது விநியோகிக்கப்படுகின்றன. இலக்கம் 10ஏ, 10பி, 11ஏ,11பி, 12ஏ, 12பி ஆகிய ஆறு புள்ளிகளையும் உள்ளடக்கிய இப்புதிய முத்திரை இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு 24-ம் திகதி திங்கள் விநியோகிக்கப்பட்டது என்றும் ஏனையோருக்கு நாளை அந்தந்தப் பகுதி கிராமசேவையாளர்களூடாக விநியோகிக்கப்படும் எனவும் மேற்படி செயலர் பிரிவுகளின் வட்டாரங்கள் தெரிவித்தன. (22)

## வெளியீடு

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வணிக ஜோதி 16 ஆவது மலர் வெளியீட்டு விழா கல்லூரி பிரதான மண்டபத்தில் நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

## மாணவர்களுக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று இம் முறை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிற்கான பாராட்டு விழா நேற்று மண்டைதீவு மகா வித்தியாலயம் இயங்கி வரும் புதிய உயர் கல்லூரியில் நடைபெற்றது.

மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் இருந்து இம்முறை பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள செல்வி திருவருட் செல்வி விநாயகமூர்த்தி, செல்வி அன்பரசி சிவசுப்பிரமணியம், செல்வன் சரவணபவன் மோகனபவன், ஆகிய மாணவர்களை மேற்

## குடியரசு தின வைபவத்தின் போது

# தமிழக ஆளுநர் சென்னாரெட்டிக்கு ஜெயலலிதாவால் ஆபத்து

### வாழப்பாடி ராமமூர்த்தி எச்சரிக்கை

(சென்னை)

சென்னையில் நடைபெறவிருக்கும் குடியரசுத் தின அணிவகுப்பின்போது மாநில ஆளுநர் சென்னா ரெட்டி மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகத் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியிருக்கிறார்,

நேற்றுப் பத்திரிகையாளர் மத்தியில் பேசும் போது அவர் இவ்வாறு கூறினார்.

குடியரசுத் தினத்தன்று முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை சென்னா ரெட்டி ஏற்கும் போது அல்லது தேசியக் கொடியை ஏற்றும் போது அவர் மீது ஜெயலலிதா கட்சியான அகில இந்திய அண்ணா தி. மு. கட்சியினர்தாக்குவதற்குத் திட்டமிட்டிருப்பதாக வாழப்பாடி செய்தியாளரிடம் தெரிவித்தார். மேலும், செல்வி ஜெயலலிதா இந்தப்பணியை தனது அமைச்சர் ஒருவரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் வாழப்பாடி தெரிவித்தார்.

முன்னாள் வழக்கத்துக்கு மாறாக அகில இந்திய அண்ணா தி. மு. கட்சியினர் குடியரசு தின விழாவைத் தனிப்பட்ட முறையில்கொண்டாடவுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆளுநர் தேசியக் கொடி ஏற்றும் இடத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் தமிழக அரசின் நிகழ்ச்சிகள் நடைபெறும். ஆளுநர் தேசியக் கொடியை ஏற்றும்போது நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் மூவர்ணக் கொடியைப் பறக்க விடுவார். ஒரு கிலோ மீற்றர் தொலைவில் இரு கொடிகள் ஏற்ற வேண்டிய அவசியம் என்ன என்று வாழப்பாடி ராமமூர்த்தி கேட்டுள்ளார்.

ஆளுநர் சென்னாரெட்டியின் உயிருக்கு அகில இந்திய அண்ணா தி. மு. கவினரிடமிருந்து பாதுகாப்புத்தரும் படியும் வாழப்பாடி மத்திய அரசைக் கேட்டுள்ளார்.

## புகையின் அளவை அளவிட நவீன கருவி தருவிப்பு

(கொழும்பு)

2கோடி 30லட்சம் ரூபா பெறுமதியான புகை அளவிடும் கருவிகளை இலங்கை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளது. இக்கருவிகள் தற்போது பரீட்சிக்கப்பட்டு வருகின்றன.

இக்கருவிகளை பொலிசாருக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் வழங்குவதற்கு முன்னர் அதன் செயற்பாடுகள் பற்றி இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் ஆராய்ந்து வருகிறது.

டீசல் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையின் மட்டத்தை அளவிட இவை பயன்படுத்தப்படவுள்ளனவாம் சுற்றாடல் பாராளுமன்ற அமைச்சரின் பொர்சுக்கமைய அமைச்சின் அங்கீகாரத்துடன் இக் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

டீசல் வாகனங்கள் வெளியிடும் புகையின் அளவை பொலிசார் அளவிடுவார்கள். இதற்கென 72பொலிசாருக்கு ஒருநாள் பயிற்சி வகுப்பு வழங்கப்படவுள்ளது.

கூடுதலான புகையினை விடும் வாகனச் சொந்தக்காரர்களுக்கு அதன் இயந்திரங்களை திருத்தி அமைக்க சந்தர்ப்பம் வழங்கப்படும். அவ்வாறு செய்யத்தவறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படவுள்ளதாம்.

புகைமட்டத்தை பரிசோதிப்பதற்காக தனியார் வாகன சாலை நிலையங்களிலும் பழுதுபார்க்கும் நிலையங்களிலும் இக் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பெற்றோல் கொண்டு இயங்கும் வாகனங்களும் புகையைக்கக்குவதால் அவையும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுமென அமைச்சர் குறிப்பிட்டார்.

## வாய்பிளந்துள்ள மதகு; பொதுமக்களுக்கு அபாயம்

(குருநகர்)

வாயைப் பிளந்து கொண்டிருக்கும் மதகுகளால் இரவு வேளைகளில் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

யாழ். நகரின் பல பகுதிகளிலும் இத்தகைய மதகுகள் கடந்த பல மாதங்களாக செப்பனிடப்படாமல் இருந்து குள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக யாழ். பற்றிக்ஸ் வீதியில் சவக்காலைச் சந்தி, மவுண்கார்மல் வீதியில் கடற்கரை வீதி - கதீற்றல் வீதிச் சந்தி, கோவில்வீதியில் சட்டநாதர் வீதிச் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள மதகுகள் பலமாதங்களாகவாயைப்

## ஆகாயத்தாமரை அழிக்க மாநகரசபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆரியகுளம் மற்றும் கன்னாதிட்டிக்குளம் ஆகியவற்றில் ஆகாயத் தாமரை படர்ந்து வருவதாக யாழ். மாநகரசபை தெரிவித்துள்ளது.

இவற்றினால் நுளம்புகளின் பெருக்கம் வலுவாக அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகமாகவே காணப்படுகின்றன.

இதனை அடுத்து மேற்படி குளங்களில் படருகின்ற ஆகாயத் தாமரையை அள்ளி எடுத்து அழிப்பதற்கு யாழ். மாநகரசபை ஊழியர்களை அதன் ஆணையாளர் பணித்துள்ளார்.

எனவே இவற்றை எடுத்து அழிக்கும் பணி இக்கிழமை ஆரம்பமாகுமென தெரிவிக்கப்பட்டது.

சென்ற வருடம் இவ்வாறு குளங்களில் ஆகாயத்தாமரை படர்ந்தமையைத் தொடர்ந்து அவற்றை யாழ். மாநகரசபை பூரணமாக அள்ளி எடுத்து அழித்திருந்த போதிலும் இம்முறையும் இவ் ஆகாயத் தாமரை படருகின்றமை பற்றி யாழ். மாநகரசபை ஆணையாளர் ஆச்சரியம் தெரிவித்தார். (பா)

## தென்மாகாணசபைதேர்தல் நியமன பத்திரம் தாக்கல்

(கொழும்பு)

தென் மாகாணசபை தேர்தலுக்கான நியமனப் பத்திரத்தை ஐக்கிய தேசியக்கட்சியினரும் பொது ஜன ஐக்கிய முன்னணியினரும் நேற்று தாக்கல் செய்துள்ளனர்.

தென்மாகாணத்தில் காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களுக்கு அந்தந்தப்பிரிவு செயலாளர்களிடம் தமது வேட்பாளர் பத்திரங்களை நேற்று இவர்கள் தாக்கல்செய்தனர்.

இம்மாகாண சபை கலைக்கப்படுவதற்கு முன்னர் கடத்தப்பட்ட மாகாணசபை உறுப்பினர். விமால் பிரான்சிகோ ஐக்கியதேசியகட்சியின் சார்பாகபோட்டியிடுகின்றார். இவரின் கடத்தல்நாடகத்தை தொடர்ந்தே தென் மாகாண சபை கலைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சிங்கள பூமி புத்திரன் இயக்கமும் காலி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு தமது நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர். இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்திட வந்த முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைத் தாக்கிய கடற்படைச் சிப்பாய் இந்த கட்சியின் சார்பில் போட்டியிடுகின்றார்.

நவசமசமாஜக் கட்சியினர் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட நியமன பத்திரத்தை தாக்கல் செய்துள்ளனர்.

இரண்டு சில்லு உழவு இயந்திரம்
(லாண்ட் மாஸ்ரர்)

கொள்வனவிற்காக

கூறு விலை கோரல்

எமது சங்க பாவனைக்காக இரண்டு சில்லு உழவு இயந்திரம் (லாண்ட்மாஸ்ரர்) பெட்டியுடனும், ஏனைய இணை உபகரணங்களுடனும் கொள்வனவு செய்யப்படும். இதற்கான கூறு விலை அனுப்புவோர் உழவு இயந்திரம் சம்பந்தமான சகலவிபரங்களுடன் ''பொது முகாமையாளர், மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்'' என்ற முகவரிக்கு 01-02-94க்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்

(7329) ப. தெ. வ. அ. கூ. ச. மானிப்பாய்.



ஈழநாதம்

4 ஆம் ஆண்டு

நிறைவுப் போட்டி

சிறுகதை, கவிதை,
மாணவர்களுக்கான கட்டுரை

முதலாம் பரிசு: தங்கப்பதக்கத்துடன் கூடிய 1500 ரூபா ரொக்கப் பணம்.

இரண்டாம் பரிசு: 1500 ரூபா ரொக்கப் பணம்.

மூன்றாம் பரிசு: 1000 ரூபா ரொக்கப் பணம்.

போட்டியில் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்

முடிவுத்திகதி : 31-01-1994



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 61ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


சரவணபவன் மோகனபவன், ஆகிய மாணவர்களை மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாராட்டி பரிசில்களை வழங்கியது. தொடர்ந்து நடைபெற்ற விழாவில் மேற்படி பாடசாலையின் ஆசிரியர்களும் விழாவிற்கு சமுகமளித்திருந்த நலன் விரும்பிகளால் பாராட்டப்பட்டனர். (88)

## வாதுவவில்

யையும் ஏற்றிக்கொண்டு இக் கப்பல் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரவுள்ளது.

இக் கப்பலின் மூலம் எடுத்து வரப்படும் தபால்கள் படையினரின் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அநேகமான தபால்கள் உடைக்கப்பட்டிருக்கக் கூடிய சாத்தியங்கள் இருப்பதாகவும் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். இவை இன்று கப்பலிலிருந்து இறக்கப்பட்டு நாளை விநியோகிக்கப்படும் என அவர் கூறினார்.

சுமார் மூன்று மாதகால இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாண குடாநாட்டிற்கான தபால்கள் இப்போது தான் எடுத்துவரப்படுவதாகவும், இத்துடன் தபால்திணைக்களத்திற்கான முத்திரைகளும் கொண்டு வரப்பட்டு இருப்பதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அத்துடன் உணவுப் பொருள்கள் ஒரு தொகுதியும் மருத்துவப் பொருள்கள் 707பொதிகளும், லாண்ட் மாஸ்டர் ஒன்றும், சிறுவர் பாதுகாப்பு நிதியத்திற்கான பத்து பீப்பாக்களும் மூடப்பட்ட பொதிகள் ஆறும் இக்கப்பலில் எடுத்து வரப்படுகின்றது எனத் தெரிய வருகிறது. (நி)(பா)

## கொழும்பில்

கழிவுகளும், வாயுக்களும் இப் புற்றுநோய்க் காவிகளுக்கு காரணமெனச் சொல்லப்படுகிறது.

[illegible] கடந்த பல மாதங்களாக செப்பனிடப்படாமல் இருந்து வருவதால் பொதுமக்கள் அவற்றில் விழுந்து உபாதைக் ... மையில் அமைந்துள்ள மதகுகள் பலமாதங்களாகவாயைப் பிளந்துகொண்டிருக்கின்றன. (21)

# கப்பல் சேவை இன்மையால் கடும் நோயாளர் அவதி

யாழ். குடாநாட்டிலிருந்து கடும் நோயாளர்களைக் கப்பல் மூலம் எடுத்துச் செல்லும் நடவடிக்கை கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக தடைப்பட்டுள்ளது. இதனால் கடும் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும் துன்பம் அனுபவித்துவருவதுடன் சிலர் தகுந்த சிகிச்சை கிடைக்காமையால் இறக்கவும் நேரிட்டுள்ளது.

சென்ற வருடம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்த குமண கப்பல் மூலம் நோயாளர்கள் கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டு வந்தனர். பின்னர் இக் கப்பலின் ஒப்பந்த காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து நோயாளர்கள் எவரும் கப்பல் மூலம் கொழும்பிற்கு கொண்டு செல்லப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## யுத்தத்தில்

சந்திரிகா குமாரணதுங்கா கலந்து கொண்டு பேசும் போது, புதைகுழி எலும்புகளுக்கு தம்பி அனுரா பண்டாரநாயக்கா பயப்படுகிறார். ஆனால் அதற்கு நான் பயப்படவில்லை என்று தெரிவித்தார்.

## சூரியகந்த

டிய நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தனர். எம்பிலிப்பிட்டிய நீதிபதிக்கு நீதிமன்ற கடமைகள் இருப்பதினால் வேறு நீதிபதியை சூரியகந்த புதைகுழி தோண்டும் பகுதிக்கு தந்துதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சூரியகந்த விவகாரம் தொடர்பாக விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என பொதுமக்களும், பல சமூக நிறுவனங்களும் இப்போது அரசாங்கத்தை வற்புறுத்தி வருவதாக சட்டத்தரணிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## உதைபந்தாட்டம்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட உதைபந்தாட்டப்போட்டியில் இன்று மாலை 3.00மணிக்கு மல்லாகம் பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதும்.

## சர்வதேச

நடாத்துவார்கள்.

மேற்படி பாதுகாப்பு வலயத்தின் மீது எதிர்காலத்தில் தாக்குதல்கள் நடைபெற மாட்டாது என்ற உறுதி மொழியை அரசாங்க தரப்பில் இருந்து பெற்றுக்கொள்வதற்கும் இவ் அதிகாரிகள் குழு முயற்சித்து வருகிறது. இதற்காக மேற்படி பாதுகாப்பு வலயம் தொடர்பான நிலைமைகளைநேரில்பார்த்து அறிவதற்கு இக்குழுவினர் தமது யாழ் விஜயத்தைப் பயன் படுத்துவார்கள் என்று கருதப்படுகிறது. (க, சி)

இவரின் கடத்தல்நாடகத்தை ... செய்துள்ளனர்.

மகளின் மரணத்திற்கு கிடைத்த

# நஷ்ட ஈட்டுப் பணத்தில் சிறுவர் நல்வாழ்வு நிதியம்

தனது மகளின் மரணத்திற்குக் காரணமாக இருந்தார் என்று நஷ்டஈடு கோரி குழந்தை வைத்திய நிபுணருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் வெற்றிபெற்ற சிரேஷ்ட அரச சட்டத்தரணி அரச குலரத்னா, கிடைத்த நஷ்ட ஈட்டுப் பணத்தை வறிய சிறுவர்களின் நல்வாழ்வுக்காக செலவிடப் போவதாக தெரிவித்துள்ளார்.

இதற்கென தனியானதொரு நிதியமொன்றைத் தாம் ஆரம்பிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

தனது மகளின் நோயை சரியாக இனம் காணத்தவறியதாகவும் சிகிச்சையளிப்பதில் கவனம் செலுத்தாமையால் தனது மகள் சுஹானி மரணமடைய நேர்ந்ததாகவும் கூறி தாக்கல்செய்த வழக்கில் இவருக்கு நஷ்டஈடு கிடைத்தமையும் தெரிந்ததே.

## 34 சிசுக்களின் உடல்

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கின் சாலையருகேயுள்ள குழியொன்றிலிருந்து 34 சிசுக்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இச் சிசுக்கள் பாங்கொக்கில் சட்டத்துக்குப் புறம்பாக இயங்கும் கருக்கலைப்பு நிலையங்களே இச் சிசுக்களை இக் குழிக்குள் போட்டிருக்கலாமென பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## அமெரிக்க

வேண்டுமென அமெரிக்க சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

குறிப்பிட்ட இராணுவ அதிகாரி ஏற்கனவே இராணுவத்திற்குரிய பெறுமதி வாய்ந்த பொருள்களை திருடியது கண்டு பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டார்.

ஆயினும் அவர் இரண்டாவது தடவையும் இதே குற்றத்தைச் செய்துள்ளார். இந் நிலையிலேயே பயிற்சிமுடியும் முன்னரேயே இவரை இராணுவ பயிற்சிக் கல்லூரியிலிருந்து உடனடியாக இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்க முடிவெடுக்கப்பட்டது. இந்த வேளையிலேயே இவர் அங்கு தலைமறைவாகியுள்ளார்.

இந்த இராணுவ அதிகாரி பல நூறு அமெரிக்க டொலர் பெறுமதியான பொருள்களை இரு தடவைகளிலும் திருடியுள்ளார்.

## எறிகணை

அவர் தொடர்ச்சியாக நடைபெற்ற எறிகணைத் தாக்குதல்களால் பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்துள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

புனித யாகப்பர் ஆலயம் மீது விமானப்படையினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து மௌனப்பேரணி நடைபெற்ற பிறகு மீண்டும் அப்பகுதியில் விமானக்குண்டு வீச்சு நடத்தப்பட்டது, வஞ்சம் தீர்ப்பதானசெயல் என்று மக்கள் கருதுவதாகவும் அரச அதிபர் கூறினார்.

## ஐ. தே. க

பிரசாரங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சிறந்த பேச்சாளர்கள் இன்மையால் மீண்டும் இவர் அழைக்கப்பட்டுள்ளார் என தென்பகுதி அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.